RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd223S115

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Poet C. Saravana Karthikeyan Poetry is the Status of Prostitution

## கவிஞர் சி. சரவண கார்த்திகேயன் கவிதைகள் வழி அறியலாகும் பரத்தையர் நிலை

**S. Suganyadevi** [a,*]

[a] Department of Tamil, Devangar Arts College, Aruppukkottai-626101, Tamil Nadu, India.

*Corresponding author Email: ns.suganyadevi@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S115

Received: 13-04-2022; Revised: 24-07-2022; Accepted: 01-08-2022; Published: 19-08-2022

**Abstract:** Only enlightened human beings are the most miraculous, wonderful and beautiful of all living beings. Other beings do not realize the depth of birth, life and death. Human beings are completely different from other living beings. Speech, laughter, love, affection, mercy, sacrifice, and tolerance all belong only to the enlightened human being. All of this cannot be expected from other living things. Born in this human life, she is so proud and proud that everyone admires her. The woman is equal to a man by birth and number. She lives in the life of a man as a daughter, sibling, wife and mother. She is the woman who carries human society in her womb, repents, feeds her milk and love, and refines it. The problem begins from birth for a woman with such pride. Women are struggling to find a place in this society as a single individual in the face of all problems. There is no literature that does not address the problems of a woman. This literary genre includes new poetry. Gender-based discrimination, inequalities, deprivation of rights, humiliations, sexual violence, unemployment, job losses, poverty, the plight of women who have been derailed for family burdens, and patriarchal oppression form the subjects of new poetry. Considering the poverty of the family, women also become prostitutes who sell their bodies to alleviate their family poverty. We all know that women's lives, in general, are full of problems. However, women who live as prostitutes face many problems in our society. Poet C. Saravanakarthikeyan talks about printing Has written and published a collection of poems. This article is intended to illustrate the point made in the collection of poems about the problems faced by prostitutes.

**Keywords:** Prostitute, Literature, Tolkappiyam, Belief, Chastity, Thirukkural, Renewal Poetry

**Language:** **Tamil**

## முன்னுரை

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. இலக்கியம் என்பதில் சங்க இலக்கியத்தில் ஆரம்பித்து நவீன இலக்கியம் வரை அடங்கும். இவ்வகை இலக்கியத்தின் பாடுபொருள்களாக அமையும் கூறுகளில் பெண்களுக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. அக்கால இலக்கியங்களில் இருந்து இக்கால இலக்கியங்கள் வரை பெண்களைப் பற்றி அமையாத இலக்கியங்களே இல்லை எனலாம். 'மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்லமாதவம் செய்திட வேண்டுமம்மா" என்றார் கவிமணி. சங்க இலக்கியங்கள் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை எவ்வளவு தான் பெண்ணின் பெருமையைப் புகழ்ந்து பேசுபவையாக இருந்தாலும்; எதார்த்த வாழ்வில் பெண்ணின் பெருமையானது புகழ்ந்து பேசும் அளவில் இல்லை. பெண் ஒரு போகப் பொருளாகவே நம் சமூகத்தினரால் பார்க்கப்படுகிறாள். அவளது உடலிற்கு தரப்படும் முக்கியத்துவம் பெண்மைக்குத் தரப்படுவதில்லை. பிறப்பில் தொடங்கி இறப்புவரை துன்பம் ஒன்றையேத் தமது வாழ்வில் பெண்கள் அனுபவித்து வருகின்றனர். பெண்ணின் வாழ்வில் அவள் அடையும் துன்பங்களும்; அவமானங்களும்; புறக்கணிப்புகளும் பெண்ணைத் தவறான வழியில் போகும்படிச் செய்து விடுகின்றன. ஒரு சில பெண்கள் குடும்பச் சுமையினைத் தீர்ப்பதற்காக விலைமகளிர் ஆகவும் வேலை செய்கின்றனர்.

விலை மகளிர் (பரத்தையர்) தொழில் செய்கின்ற பெண்களுக்கும் மனம் என்பது உண்டு; உணர்வுகளும் உண்டு என்பதை மையமாக வைத்து கவிஞரும், எழுத்தாளருமான சி. சரவணகார்த்திகேயன் அவர்கள் எழுதியுள்ள 'பரத்தைகூற்று' என்ற கவிதைத் தொகுப்பினை எழுதியுள்ளார். அக்கவிதைத் தொகுப்பு வழி பரத்தைப் பெண்களின் மனஉணர்வுகளையும், அப்பெண்கள் அடையும் துன்பங்களையும் ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

## பரத்தையர் - பொருள் விளக்கம்

பரத்தையர் என்ற பாத்திரம் சங்ககாலத்தில் 'கொண்டி மகளிர்' எனவும் 'வேசிகள்' எனவும் 'விலைமகள்' எனவும் குறிக்கப்பட்டுள்ளது (Devaraj, 2005).

பரத்தையர் என்பவர் ஆடலிலும் பாடலிலும் வல்லவராகி அழகையும், இளமையையும் காட்டி இன்பத்தையும் பொருளையும் விரும்பி ஒருவரிடம் செல்லும் பெண்கள் ஆவர். இவர்கள் ஒருவரிடத்தும் தங்காத்தன்மை உடையவர்கள் ஆவர்.

பசிக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டு. பசியைப் போக்க வாழ்க்கை தடம் புரள்கிறது. 'விபச்சாரம்' என்ற வார்த்தையின் அனுபவத்தைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தால்,

“விபச்சாரம் என்பது பெண்கள் அடிமைகள்

என்பதைக் காட்டும் ஒருகுறிப்பு வார்த்தை

என்று தான் சொல்லவேண்டுமே யொழிய

வேறல்ல. ஏனெனில் விபச்சாரதோஷம்

என்பதும், விபச்சாரம் செய்வதால்

ஏற்படும் ஒழுக்கக் குறைவு என்பதும்

இப்பொழுது வழக்கத்தில் பெண்களுக்குத்தான்

உண்டேயொழிய ஆண்களுக்கு அந்தமாதிரி

கிடையாது" (Periyar, 1997)

என்ற தந்தை பெரியாரின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

தன் குடும்பத்தின் வறுமையின் காரணமாகப் பெண்கள் பரத்தையராக மாறுகின்றனர். பெண்களின் வாழ்க்கைக்கும் வறுமைக்கும் தொடர்புண்டு. 'கற்பு' என்பது பெண்கள் போற்றவேண்டிய, போற்றி வருகின்ற தலையாய நற்பண்பு. 'கற்பு என்பது ஆழ்ந்த பொருள் பொதிந்த வார்த்தை. ஒரு தேசத்தைப் பொறுத்தவரை அது ஒருதர்மம் - ஒருதலைபட்சமான ஒரு கருத்துருவாக்கத்தைத் தர்மம் என்று அழைப்பதே 'முரண்நகை' என்ற போதிலும், கற்புக்காக உயிரைவிட்ட, ஊரை எரித்த பெண் பிரதிநிதிகள் வாழ்ந்த இதே மண்ணில் தான் ஒருவேளை சோற்றுக்காகப் பெண்கள் கற்பை விற்கும் அவலமும் நிகழ்கிறது” (Saravanakarthikeyan, 2010).

## தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பரத்தையர்:

மனித சமூகம் புவியில் தோன்றி வளர்ந்து அறிவுசார்ந்த புலன்களின் வழியே பல்வேறு நிகழ்வுகளை நிகழ்த்தி வந்துள்ளன. அப்படி நிகழ்த்தி வந்த சமூகத்தில் அகம், புறம் என்ற திணை சார்ந்த ஒழுக்கமுறைகள் மக்களிடம் காணப்பட்டன. இதனை தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களில் புலவர் பெருமக்கள் காலந்தோறும் பதிவு செய்து சென்றுள்ளனர். தொல்காப்பியம் தமிழின் முதல்நூல் என்று இக்காலம் வரை கூறப்படுகிறது. தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்கள் உள்ளன. இவற்றுள் அகம், புறம் சார்ந்த நிகழ்வுகளின் பதிவாக பொருளதிகாரத்தில் நிலம், பொழுது, தலைவன், தலைவி, தோழி பற்றிய நிகழ்வுகள் உள்ளன. இவற்றில் தலைவிக்கு நிகரான பரத்தையர் பற்றிய கூற்றுக்களையும் தொல்காப்பியர் களவியல் என்னும் இயலில் குறிப்பிட்டுள்ளார்.

'தன்வயின் உரிமையும் அவன் உயிற்பரத்தையும்

அன்னவு முளவே யோரிடத்தான"

என்பதே அது.

தொல்காப்பிய நூலுக்கு பின்வந்த நற்கவிராச நம்பி இயற்றிய 'அகப்பொருள் விளக்கம்' என்னும் இலக்கண நூலில் பரத்தையர் யார்? பரத்தையர் எத்தகைய தன்மை அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளனர் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர் (Thirugnanasambandam, 2005).

'காதற் பரத்தையர் காமக் கிழத்தியர்

பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்

றன்னவர் உரியர் அவையிரண்டிற்கும்"

என்ற பாடல் அது. காதற்பரத்தையர், சேரிப்பரத்தையர் தம் மகளிராய்க் காதலால் புணிர்தற்குரியவராவர் (Thirugnanasambandam, 2005). காமக்கிழத்தயர் ஒருவனுக்கே உரிமை பூண்டவராய்க் காமத்தின் பொருட்டு வரையப்படுவர், பின் முறைவதுவைப் பொருட்டு வரையப்படுவர் பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியாவாள் இரண்டாம் மனைவி என்று பரத்தையர் பிரிவைபற்றி மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் பரத்தையர் பற்றிய பதிவுகள் உள்ளன. காமத்துப்பாலில்,

"பெண் இயலார் எல்லார்க்கும் கண்ணின் பொதுஉண்பர்

நண்ணேன் பரத்தைநின் மார்பு"

என்ற திருக்குறளில், பரத்தையர் ஒழுக்கம் மேற்கொண்டு மீண்டும் தன்மனைவியை அடைந்த கணவனிடம், மனைவியானவள், பரத்தையரை விரும்புவோனே! பெண் தன்மையுடையவர் எல்லாரும் தமது கண்களால் பொதுவாக உன்னை அனுபவிப்பர்; ஆகையால், நான் உன் மார்பைச் சேரமாட்டேன் என்று கூறுவதாய் திருவள்ளுவர் இக்குறளை அமைத்துள்ளார் (Manickam, 2001).

## பரத்தைகூற்று கவிதை வழி அறியலாகும் பரத்தையர் நிலை

பரத்தைமைத் தொழில் செய்யும் பெண்கள் எவரும் விரும்பி இத்தொழிலை செய்வது இல்லை. குடும்பச் சூழ்நிலையினை கருத்தில் கொண்டே இத்தொழிலிற்கு செல்லும் பெண்கள் ஏராளம்; 'பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி; 'பசிவந்திடக் கற்பும் பறந்து போகும்' என்பதை புதுமொழியாகக் கூறலாம். ஒருவேளை உணவுக்குக் கூட வழி இல்லாமல் தவிக்கும் தம் குடும்பத்தாரின் பசியைப் போக்க பெண்கள் பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்கின்றனர்.

## உணவான உடம்பு

மனிதன் உயிர்வாழ உணவு, உடை, இருப்பிடம் இவை மூன்றும் அடிப்படையானவை. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு. ஆனால் உணவு கிடைப்பதில் உலகெங்கும் சமநிலையற்ற தன்மை நிலவி வருவதால் பசியுடன் பலர் வாழும் நிலை இருந்து வருகிறது.

“தனியொருவனுக்கு உணவில்லையெனில்

ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று அழகாக சொல்லிவிட்டு போய்விட்டார் பாரதியார் (Bharathiyar, 2012). ஆனால், இன்று பெரும்பான்மையான மக்கள் ஒருவேளை கூட உணவின்றி தவித்து வருகின்றனர். தன் குழந்தையின்; தன் பெற்றோரின்; தன் உடன் பிறந்தவர்களின் பசியைப் பொறுக்கமாட்டாத பெண் தன் உடம்பை

விற்று, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வைத்து தன் குடும்பத்தாரின் பசியைப் போக்குகிறாள். இப்பெண்ணின் பரத்தமை ஒழுக்கம் இவளது குடும்பத்தாருக்குத் தெரிவதில்லை.

தம் குடும்பத்தாரின் உணவிற்காகத் தன் உடலை விற்று வாழும் இளம்பெண்களின் அவலநிலை பற்றி கூறுகையில் கவிஞர்,

"தொலைவே ஊரிலிருக்கும்

தாய் தந்தை தம்பி தங்கை

எவரும் அறிந்திலர் - அவர்தம்

உணவென் உடம்பென"

என்று கூறுகிறார் (Saravanakarthikeyan, 2010).

## கற்பு

கற்பு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. கற்பிற்குரிய இலக்கணங்களாகப் பலர் பலவற்றைக் கூறியிருக்கின்றனர். பார்க்கப்போனால் 'கற்பு' என்பதே ஓர் ஆணாதிக்க நுண்ணரசியல் தான். ஆனால் துரதிஷ்டவசமாய் பெண்களுக்கு எதிரான அச்சித்தாந்தத்தை மிகுந்த பிரேமையுடன் முன்னெடுத்துச் செல்வதே பெண்கள் தான்.

"கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை"

என்பது ஔவையார் வாக்கு (Avvaiyar, 2015). நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்வகையான பெண்மைக் குணங்களினால் நிறைவுற்று மகளிர், ஊழின் வலியினால், தமக்கு உரியான் ஒருவனைக் கண்டு காதலித்துத் திருமணமும் புரிந்தபின்னர், அவன் ஒருவனே தமக்கு எல்லாமும் என வாழும் உயரிய நிலை தான் கற்பு. கற்பு குறித்து கூறுகையில் நாலடியாரில்,

"அரும்பெற்ற கற்பின் அயிராணி அன்ன

பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும் - விரும்பிப்

பெருநசையாற், பின்னிற்பார் இன்மையே பேணும்

நறுநுதலாள் நன்மைத் துணை"

என்று கூறப்பட்டுள்ளது (Puliyur Kesikan, 2010). கற்பு குறித்து கூறுகையில் பாரதியாரும்,

'கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

என்று ஆண், பெண் என்ற இருபாலருக்குமே கற்பு பொதுவானது என்று கூறியுள்ளார் (Bharathiyar, 1992).

கற்பு என்பது இன்றியமையாத ஒன்று தான். ஆனால் விலைமகளிர் பார்வையில் கற்பு என்பது காசாகத்தான் தெரிகிறது. அவர்களைப் பொறுத்தவரை 'கற்பு' என்பது இன்றியமையாத ஒன்று அன்று. கற்பினை விற்றால் தான் பணம் கிடைக்கும் என்பதை,

'என்னமோ கற்பு, கற்பு

என்று கதைக்கிறீர்களே

கற்போடு வாழ்வதால்

கிடைக்குமா கால்காசு?'

என்ற கவிதை வரியானது பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாய் உள்ளது (Saravanakarthikeyan, 2010).

இன்றைய காலகட்டத்தில் கற்போடு வாழ்வதென்பது பெரும்பாலான பெண்களுக்கு முடியாத ஒன்றாய் உள்ளது. இதனை,

"கொடுப்பனை

வேண்டும்-

கற்போடு

வாழ்வதற்கும்"

என்ற கவிதை வரிகள் மூலம் அறியமுடிகிறது (Saravanakarthikeyan, 2010).

கற்பினை விற்று வாழும் பெண்கள் மட்டும் விலைமகளிர் அல்லர். தம் காரியத் தேவைக்காகப் பிற ஆடவர்களிடம் தேவையற்று சிரித்துப் பேசுகின்ற; பத்தினிப் பெண் என்ற போர்வையில் வாழும் ஒவ்வொரு பெண்ணும் விலைமகள் தான் என்பதை,

"மதிப்பெண் வாங்க பேராசிரியரிடத்தோ

பேரம் பேசுகையில் கடைக்காரனிடத்தோ

வட்டிவாங்க வரும் கடன்காரனிடத்தோ

லஞ்சம் கேட்கும் அரசு அதிகாரியிடத்தோ

நீண்ட வரிசையில் முன் நிற்பவனிடத்தோ

பல்லிளித்துக் குழைந்து நின்றிருக்கக்கூடும்

உம் வீட்டுப் பெண்டிர் - அதன் பெயர் என்ன?"

என்ற கவிதை வரிகள் வழி விளக்குகிறார் (Saravanakarthikeyan, 2010). இக்கவிதையானது விலைமகளிரைப் பற்றி இழிவாகப் பேசிய நபர்களிடம் வினா எழுப்புவதாய் அமைந்துள்ளது எனலாம்.

## ஓய்வின்மை

மனித உடல் என்ற இயந்திரத்திற்கு ஓய்வு என்பது முக்கியம். ஆனால் இன்று பெரும்பாலானோர் ஓய்வின்றி உழைக்கும் நிலையைக் கண்முன்னே காண்கிறோம். தொடர்ச்சியான செயலில் இருந்து சிறிதுநேரம் அல்லது சிலகாலம் விடுபடுவது. மாற்றுச் செயலில் ஈடுபடுவதும் ஓய்வு தான்.

"சிலர் உணவைத் தேடுகின்றனர். சிலர், செல்வத்தையும் சுகத்தையும் தேடுகின்றனர். சிலர் புகழைத் தேடுகின்றனர். ஆனால் எல்லோரும் ஓய்வை நாடுகின்றனர் என்ற வாங்பிரிட்ஜின் மேற்கோளை தன்நூலில் முன் வைத்துள்ளார் ப. ராமசாமி" (Ramasamy, 2004).

ஆனால் விலைமகளிரின் உடலிற்கு ஓய்வு என்பதே இல்லை. இக்கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் பாரதியாரின் மேல் விருப்பம் கொண்டவர் போலும்; அதனால்தான் பாரதியின் கவிதை வடிவில் ஒருசில கவிதைகளை எழுதியும் உள்ளார். தமக்கான தொழில் குறித்து பாரதி கூறிய கவிதை நாம் அறிந்ததே. அதைப்போல விலை மகளிருக்கான தொழில் குறித்து கூறுகையில் கவிஞர்,

"நமக்குத் தொழில் கலவி,

நாட்டிற்கு உழைத்தல்,

இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

என்று கூறுகிறார் (Saravanakarthikeyan, 2010). மேலும், இத்தொழில் செய்யும் பெண்களுக்கு எந்தவொரு விடுமுறையும் இல்லை. ஆயுதபூஜை நாட்களில் தொழிலாளிகள் தமக்கான தொழிற்கருவிகளுக்கு பூஜை செய்வர். ஆனால் அன்றைய நாளிலும் இப்பெண்களுக்கு விடுமுறை இல்லை என்பதை,

"ஆயுத பூஜை

அன்றைக்கும்

ஓய்வறியாது

எம் யோனி"

என்ற கவிதை வரிகள் விளக்குகின்றன (Saravanakarthikeyan, 2010).

### தாய்ப்பாலும் களவாடப்படல்

பிறந்தவுடன் குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய முதல் பரிசு தாய்ப்பால் தான். ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் 7ம் தேதி வரை 'உலக தாய்ப்பால் வாரம்' கொண்டாடப்படுகிறது. இதற்கெல்லாம் ஒரு கொண்டாட்டம் தேவையா என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழலாம். தாய்க்கும் சேயுக்குமான பாசப்பிணைப்பு தாய்ப்பாலால் தான். தாய்ப்பால் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும். குழந்தையின் புத்திக்கூர்மையை மேலும் உயர்த்துகிறது. தம் குடும்ப வறுமையை சரி செய்ய பரத்தமை பெண்கள் அடையும் துன்பங்களுள் அவர்களது தாய்ப்பால் களவாடப்படுவதும் அடங்கும்.

இவர்களிடம் இன்ப நுகர்ச்சிக்காய் வரக்கூடிய ஆண்கள் இவர்களது தாய்ப்பாலையும் விடுவதில்லை.

இதனை,

"சில்லறைகள் மிச்சம் பிடித்து

புட்டிப்பால் வாங்க வேண்டும்

குழந்தைக்கு - முலைப்பாலும்

விடுவதில்லையெம் புரவலர்கள்"

என்ற கவிதை வரிகள் வழி அறியலாம் (Saravanakarthikeyan, 2010). இக்கவிதை வரியானது விலைமகளிரோடு சேர்ந்து அவர்களது பால்மணம் மாறாக்குழந்தையும் துன்பப்படும் காட்சியை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றது.

### முடிவுரை

பரத்தை எனும் சொல்லும் காமக்கிழத்தி எனும் சொல்லும் தொல்வழக்கில் இருந்துள்ளன என்பது தொல்காப்பியம் காட்டும் உண்மை. இச்சொற்கள் தற்பொழுது மருவி விலைமகளிர், விபச்சாரி (Prostitute) என வழங்கப்படுகின்றன. போக நுகர்ச்சியினால் தம்மை நாடி இன்பத்தை அனுபவிக்க வருபவர்களின் தாகத்தை தீர்த்து இன்பத்தை அளிப்பதே விலைமகளிரின் வாழ்வியல்நெறி. இதனை ஒவ்வொரு இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. பதிவு செய்தும் வருகின்றன. இப்பெண்களின் எண்ண உணர்வுகளுக்கு யாரும் முக்கியத்துவம் தருவதில்லை. வெறும் போகப் பொருளாக மட்டுமே நம் சமுதாயத்தினரால் பார்க்கப்படுகின்றனர். தனது குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தன் ஆசையை மறந்து, துறந்து, தன் குடும்ப உறுப்பினர்களின் எண்ண ஓட்டங்களுக்கு மதிப்பளித்து உயர்வானதாய் போற்றப்படும் கற்பினை அதாவது தம் உடம்பினை விற்று குடும்பத்தினருக்கு இன்பம் அளித்து தம் வாழ்க்கையை பாழ்படுத்திக் கொள்கின்றனர். நம் நாட்டிற்குக் கிடைக்கும் வருமானங்களில் அதிகஅளவில் வருமானம் கிடைக்கும் துறை விபச்சாரத்துறை தான். இத்தொழிலால் நாட்டிற்கு நன்மை ஏற்படுகிறதே தவிர அத்தொழிலை மேற்க்கொண்டு வரும் பெண்களுக்கு எவ்வித பயனும் இல்லை. குடும்ப உறுப்பினர்களின் இன்பத்திற்காக இத்தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும் பெண்கள் அனுபவிப்பது துன்பத்தை மட்டும் தான். தமக்கான ஆசைகளைத் துறந்து நம் கண் முன்னே வாழும் துறவிகள் இப்பெண்கள் என்பதை விளக்குவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

## References

Avvaiyar, (2015) Kondrai Vendan, Minerva Publications, Chennai, India.

Bharathiyar, (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Devaraj, M., (2005) Parathiyar Malai, University of Madras, Chennai, India.

Manickam, Pora. A., (2001) Thirukkural, Thendral Nilayam, Chidambaram, India.

Manickavasagam, Gna., (2006) Thollkapiyam Moolamum Uraium, Uma Pathippagam, Chennai, India.

Periyar, (1997) Pen Yen Adimaiyanal, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Puliyur Kesikan, (2010) Naladiyar, Saradha Pathippagam, Chennai, India.

Ramasamy, P., (2004) Ulaga Aringnar Sindhanai Kalanjiyam, Nathan Pathippagam, Chennai, India.

Saravanakarthikeyan, C., (2010) Paraththai Kootru, Aganazhigai, Chennai, India.

Thirugnanasambandam, S., Akapporul Vilakkam, Kathir Pathipagam, Chennai, India.

### Funding

No funding was received for conducting this study.

### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

### Cite this Article

S. Suganyadevi, Poet C. Saravana Karthikeyan Poetry is the Status of Prostitution, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 73-79. DOI: https://doi.org/10.54392/ijmrd223115